©
தமிழ்நாடு அரசு
2017

பதிவெண் :
டி.என்./எஸ்.ஆர்.ஜி.எம்.–10

# பெரம்பலூர் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

பெரம்பலூர், ஆகஸ்ட் 17, 2017

[ எண் 4

[ ஆவணி 1, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு - 2048 ]

பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| உள்ளாட்சித்துறை அறிவிக்கை | ... | 7–42 |

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை

I

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### பெரம்பலூர் நகராட்சி

(ந.க. எண். 16288 / 2015 / H1, நாள் –2–2017)

(i)

### திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016

**1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 310ஆவது பிரிவின்படி பிரசுரம் செய்யப்படுகிறது.**

பெரம்பலூர் நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306இன்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் – 2016 துணைவிதிகள் மற்றும் நிர்வாகக் கட்டணங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண். 94/2017, நாள் 28–2–2017இல் ஒப்புதல் வழங்கப்பட்டது. இது தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளை பெற 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு தினத்தந்தி மற்றும் தினமணி நாளிதழில் 25–3–2017ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொது மக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. மேலும், 28–3–2017 அன்று காலை 11.00 மணியளவில் குடியிருப்போர் நலசங்கம் மற்றும் அதிகப்படியான குப்பைகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு அக்கூட்டத்தில் துணைவிதிகள் மற்றும் நிர்வாக கட்டணங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இதிலும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016 துணைவிதிகள் மற்றும் நிர்வாக கட்டணங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று செயல்படுத்திட இந்நகர்மன்ற தீர்மான எண். 94/2017, நாள் 28–2–2017இல் அனுமதியளித்துள்ளது.

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டம் துணை விதிகள் 2016 மற்றும் நிர்வாக கட்டணங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க. எண். 12437–4/2017/தி3, நாள் 6–6–2017இல் கொள்கை அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்ட, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் விதிகள் 2016–ன்படி நகர் மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி, நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்படும்.

1. பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துகள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்கள் இன்ன பிற இடங்களில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துகளிலோ, கழிவுநீர்க் கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக் கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.

2. மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறமுள்ள கூடையிலும் சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும்.

3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும். தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை நகராட்சி வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாங்கப்பட மாட்டாது.

4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கவேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடங்களிலோ அல்லது கழிவுநீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்கவேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது.

6. மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருந்து கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்கக்கூடாது. இந்திய அரசின் 1999ஆம் ஆண்டின் மருத்துவக் கழிவுநீர் மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச் சாலை பொறுப்பில் உரியவாறு அகற்றி அழித்தல்வேண்டும். மருத்துவமனை கழிவுகளை நகராட்சி பகுதிகளில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

7. தோட்டக் கழிவுகளை, பால்பண்ணை கழிவு ஆகியவற்றை உருவாக்குவோர் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்தவேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

8. கட்டட இடிபாடுகளை கட்டட உரிமையாளர் ஒப்பந்தக்காரர்கள், சாலைகளிலோ, தெருக்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ளவேண்டும் அல்லது உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும்.

9. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

10. திருமண மண்டபங்கள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின்போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவுநீர் வாய்க்கால்களிலோ அல்லது

வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை நமது வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்கவேண்டும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே அவற்றை பெற்றுச்செல்லும்.

11. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருட்கள் விற்பனை நிலையங்கள், இரவு நேரக் கடைகள், காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய நிர்வாக கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக்கொள்ளும்.

12. அச்சகங்கள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.

13. தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது. கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி அப்புறப்படுத்தவேண்டும்.

14. பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.

15. செப்டிக் டேங்க் கழிவுகளை, கழிவுநீர் வாய்க்கால்களிலோ அல்லது தெருக்களிலோ கொட்டக்கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

16. நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை நீக்கம் செய்வதற்கான நிர்வாக கட்டணங்களை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

**அட்டவணை-I**

| வ. எண். | பொருள் | காலம் | கட்டணம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) ரூபாய் |
| | 1. குடியிருப்பு | | |
| I) | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ. 500–க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 10.00 |
| II) | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ. 501–1000–க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 20.00 |
| III) | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ. 1001–2000–க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 30.00 |
| IV) | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ. 2001–க்குமேல்) | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| | 2. நிறுவனம் | | |
| I) | தனியார் பள்ளி / கல்லூரி விடுதி / தனியார் அலுவலக வளாகம் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| II) | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| III) | கிளினிக் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| | 3. வணிகம் | | |
| I) | டீ ஸ்டால் / சிற்றுண்டி | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| II) | நடமாடும் உணவகம் | நாள் ஒன்றுக்கு | 20.00 |
| III) | உணவகம் சிறியது | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| IV) | உணவகம் பெரியது | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| V) | வணிக வளாகம் | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| VI) | திருமண மண்டபம் சிறியது | நிகழ்வு ஒன்றுக்கு | 500.00 |
| VII) | திருமண மண்டபம் பெரியது | நிகழ்வு ஒன்றுக்கு | 1000.00 |
| VIII) | தையல் கடை | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| IX) | இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| X) | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| XI) | தேங்காய் / பூ / பழம் / காய்கறிகள் வியாபாரம் | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| XII) | பலசரக்கு / ஸ்டேசனரி / மருந்தகம் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |

| (1) | (2) | (3) | (4) ரூபாய் |
|---|---|---|---|
| XIII) | டி.வி. செல்போன் எலக்ட்ரானிக்ஸ் பழுதுநீக்கும் கடை | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| XIV) | வல்கனைசிங் கடை | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| XV) | அனைத்து சிறுதொழில் கழிவுகள் | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| XVI) | ஓடுகள், பளிங்கு கற்கள் போன்றவை விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| XVII) | மரச்சாமான்கள் மற்றும் டிம்பர்ஸ் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| XVIII) | பழைய சாமான்கள் சேகரித்தல் | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| XIX) | அச்சகங்கள் மற்றும் காகிதப் பொருட்கள் விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| XX) | தகரம் மற்றும் பெயிண்ட் விற்பனை (Hardwares) | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| | 4. மற்றவை | | |
| I) | மட்டன் / சிக்கன் / மீன் ஸ்டால்கள் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| II) | சினிமா தியேட்டர் | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| III) | ஜவுளி கடை வியாபாரம் (சிறியது) | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| IV) | ஜவுளி கடை வியாபாரம் (பெரியது) | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| V) | தோல் பை விற்பனை, தையல் செய்தல், காலணி விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| VI) | மரக்கழிவுகள் | 1 லாரி அளவுக்கு | 1000.00 |
| VII) | தோட்டக்கழிவுகள் | 1 லாரி அளவுக்கு | 1000.00 |
| VIII) | வீட்டுத் தோட்டக் கழிவுகள் | 1 லாரி அளவுக்கு | 1000.00 |
| IX) | கட்டிட கழிவுகள் | 1 லாரி அளவுக்கு | 1000.00 |
| X) | டெக்ஸ்டைல்ஸ் நிறுவனக்கழிவுகள் | 1 லாரி அளவுக்கு | 1000.00 |
| XI) | தோல் நிறுவனக்கழிவுகள் | 1 லாரி அளவுக்கு | 1000.00 |

17. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 வருடாந்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின்கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15-ன்படி, பெரம்பலூர் நகராட்சியின் சுற்றுச்சூழலை எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

18. துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள, செய்யக்கூடாத செயலை செய்பவருக்கு தண்டனையாக அட்டவணை IV-இல் கண்டவாறு அபராதம் வசூலிக்கப்படும்.

19. தொடர் குற்றங்களுக்கு தினசரி ரூ.100 வீதம் அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

20. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு நகராட்சியின் ஆணையாளருக்கு நகராட்சி நகர்மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## அட்டவணை –II

## மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் விளக்கப்பட்டியல்

| உயிரி மக்கும் கழிவு | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு |
|---|---|
| மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படும் கழிவாகும் இதை ஈரக்கழிவு எனவும் அழைக்கப்படுகிறது மக்கும் கழிவு முழுமையாக தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒருவகை கழிவாகும். | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படுவதாகும் இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகிறது இதை ஒரு செயல்முறையில் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப்பொருட்களாக மாற்றமுடியும் புதிய அப்பொருட்கள் அசல் பொருட்கள் போல இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம் |

| | |
|---|---|
| • இலைகள், முட்டை ஓடுகள், பழம் காய்கறித்தோல்கள மற்றும பயனபடாதென விடுபவை உள்ளிட்ட சமையலறைக் கழிவுகள் | • செய்தித்தாள்கள் |
| • இறைச்சி மற்றும் எலும்புகள் | • தாள், புத்தகம் மற்றும் இதழ்கள் |
| • மலர்கள் உட்பட தோட்டக் குப்பை மற்றும் இலைக் குப்பை | • கண்ணாடி |
| • விலங்கு குப்பை | • உலோகப்பொருட்கள், கம்பி |
| • பழுதடைந்த காகிதம் | • நெகிலி(Plastic) |
| • தேங்காய் ஓடு | • கந்தல் துணி |
| • சாம்பல் | • தோல் |
| | • ரெக்சின் (Rexine) |
| | • தொய்வை (Rubber) |
| | • மரம் / அறைகலன |
| | • மூட்டை கட்டல |

## அட்டவணை –III

## வீட்டு அபாயகரமான கழிவு பட்டியல்

- ஏரோசல் டப்பா (Aerosal cans)
- மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்
- நிறம் நீக்கி மற்றும் வீட்டு சைமயலைறயும், வடிகாலையும் தூய்மை செய்யும் பொருட்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள், வேதியபொருட்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒப்பனை பொருட்கள் இரசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒளிவிளக்குகள், குழாய் விளக்குகள் மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாமென்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உயவுப்பொருட்கள் (lubricants) வஜ்ரபசைகள் (glues) நீர்மமாக்கிகள் (Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் கலைக்கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள்
- புகைப்பட ஆடியோ / விடியோ நாடாக்கள் (Tabers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்
- இரசாயனப் பொருட்கள் மெத்து (STYROFOAM) மற்றும் அறைகலன்கள் சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள்.
- மூட்டை கட்டும் கருவிகள், வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள்
- தனியாள் கணினிகள், தொலைபேசிகள் எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைக்காட்சி பெட்டிகள், கனிப்புப்பொறி, ஜி.பி.எஸ். (GPS) தானியங்கி மின்னணு டிஜிட்டல் படி பெட்டிகள், தானாக ஒளியை இயக்கும் கருவிகளும் மற்றும் டி.வி.டி. (DVD)கள், வி.சி.ஆர் (VCR)கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப் பயன்படுத்தி ஒளி இயக்கும் கருவிகள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின்கழிவுகள்.

## அட்டவணை -IV

## அபராதப் பட்டியல்

| வ. எண் | துணைவிதிகள் விளக்கம் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத்தொகை. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) ரூபாய் |
| 1 | பொது இடத்தில் தனியார் சொத்தில் வண்டியிலிருந்து குப்பைகளை எறிதல், கடைகளிலிருந்து / வணிக நிறுவனங்களிலிருந்து குப்பைகளை எறிதல் | 100.00 |
| 2 | திடக்கழிவுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை | |
| | அ) குடியிருப்புகள் | 100.00 |
| | ஆ) அடுக்குமாடி குடியிருப்புகள் / காலனிகள் | 500.00 |
| | இ) அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Generators) | 1000.00 |
| 3 | கட்டுமான கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை | 5000.00 |
| 4 | தோட்டக்கழிவை, மரக்கழிவை குறிப்பிட்ட வகையில் இல்லாமல் ஒப்படைத்தல் | 500.00 |
| 5 | சமூக குப்பை ஒழுங்கு சேர்த்தல் தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் குப்பை கொட்டுதல் | 1000.00 |
| 6 | உயிரி மருத்துவ கழிவுகளை குறிப்பிட்ட வகையில் பிரிக்காமல் ஒப்படைத்தல் மற்றும் பொது இடங்களில் கொட்டுதல் | 1000.00 |
| 7 | கழிவுகளை எரித்தல் | |
| | அ) தனியார் தன் வளாகத்திற்குள் | 100.00 |
| | ஆ) தனியார் பொது இடத்தில் | 200.00 |
| | இ) நிறுவனங்கள், வணிக நிறுவனம் | 500.00 |
| 8 | மீன், வளர்ப்பு பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை (வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒருங்கு சேர்த்தல் செய்யாமல் ஒப்படைத்தல். | 500.00 |
| 9 | கொள்கலம் / குப்பைக்கூடை இல்லாத விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு. | 100.00 |
| 10 | குறிப்பிட்ட வகையில் கழிவை பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு. | 500.00 |
| 11 | பொதுக்கூட்டம் / நிகழ்ச்சிக்கு பின் 24மணி நேரத்திற்குள் பொது இடத்தை தூய்மைப்படுத்தாமல் இருப்பதற்கு. | 1000.00 |

இச்செயல்பாடுகள் அனைத்தும் 1–7–2017 முதல் அமுலுக்கு வருகிறது.

**இரா. முரளி,**
*தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,*
*பெரம்பலூர் நகராட்சி.*

பெரம்பலூர்,
2017 பிப்ரவரி.

(ii)

## பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016

(நகர்மன்ற தீர்மானம் எண். 139, நாள் 24–4–2017)

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண். 29/1986)இல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளது. இந்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும்.

பெரம்பலூர் நகராட்சி பிளாஸ்டிக் (நெகிழி) கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306இன்கீழ் இயற்றப்பட்டது.

**தண்டனை :–**

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

**மேல் முறையீட்டிற்கு உரிமை :–**

பெரம்பலூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைத் துணைவிதிகள் 2016ஆல் இடர்உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர் இந்தத் துணைவிதிகள் பெரம்பலூர் நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்றபின் நடைமுறைக்கு வந்துள்ளன.

### அபராதக் கட்டணம்

### அட்டவணை-1

| வ. எண். | துணை விதிகள். | உட்பிரிவும் / துணைவிதிகள் விளக்கமும். | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை. |
|---|---|---|---|
| | | | (4) |
| (1) | (2) | (3) | ரூபாய் |
| 1. | 6(2) | பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள் தெரு விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையாளர்கள் நகராட்சியில் வருடத்திற்கு ரூ. 48,000 (மாதம் ரூ. 4,000) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்யவேண்டும். ஆண்டுதோறும் கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்கவேண்டும். | பொருட்களை பறிமுதலுடன் 10,000 |

| (1) | (2) | (3) | (4) ரூபாய் |
|---|---|---|---|
| 2. | 4(2) | 50 மைக்ரான் அடர்த்தி அளவிற்கு குறைவாக அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அடர்த்தி அளவிற்கு குறைவாக உள்ள ஏற்கனவே உபயோகப்படுத்தாத அல்லது மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய பைகளை எந்த நபரும் தயாரிக்கவோ அல்லது இருப்பு வைக்கவோ விநியோகிக்கவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது. | பொருட்களை பறிமுதலுடன் 10,000 |
| 3. | 6(1) | சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் விதிகள்கீழ் பரிந்துரைக்கப்படும் குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத கேரிபைகள் அல்லது பிளாஸ்டிக்தாள் அல்லது பல அடுக்கு பேக்கேஜ் ஆகியவற்றை விற்கவோ அல்லது அவற்றில் பொருட்கள் வழங்கவோ கூடாது. அவ்வாறு விற்பது தண்டனை குற்றம். | பொருட்களை பறிமுதலுடன் 10,000 |
| | | 1. குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத கேரிபைகள் | 1000 |
| | | 2. குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத பிளாஸ்டிக் | 1000 |
| | | 3. குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத பிளாஸ்டிக் பல அடுக்கு பேக்கேஜ். | 1000 |
| 4 | 4(5) | பிளாஸ்டிக் கழிவுகளை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, நீர்கால்வாய்களிலோ, நீர்நிலைகளிலோ சாலை ஓரங்களிலோ, போடக்கூடாது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும். | |
| | | 1. தனிநபர் (சொந்த இடம்) | 500 |
| | | 2. தனிநபர் (பொது இடம்) | 1000 |
| | | 3. நிறுவனங்கள் | 2000 |
| 5 | 4(9) | திறந்தவெளியில் நிகழ்ச்சி நடத்தும் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் நிகழ்ச்சியின் போது உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ வழங்கவேண்டும். | 25000 |

இச்செயல்பாடுகள் அனைத்தும் 1–6–2017 முதல் அமலுக்கு வருகிறது. பொதுமக்கள் தங்களின் மேலான ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகளை இவ்வறிவிப்பை வெளியிட்ட 30 தினங்களுக்குள் ஆணையாளர் பெரம்பலூர் நகராட்சி அவர்களுக்கு எழுத்துமூலமாக தெரிவிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

**இரா. முரளி,**

பெரம்பலூர்,
2017 பிப்ரவரி.

*தனி அலுவலர் மற்றும் ஆணையர்,*
*பெரம்பலூர் நகராட்சி.*